# இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம் London Anglo Tamil Association

# 23 வது ஆண்டுக் கலைவிழா 23rd Annual Kalai Vizha




## தமிழ் மொழிக் கல்வியினூடாய்
## தாய் நாட்டுப் பற்றினை வளர்த்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

meeraarnold.com

Management Consultants Ltd T/A

# மீரா ஆணல்ட் அண்ட் கோ

Chartered Certified Accountants

- வர்த்தக ஸ்தாபனங்களை வாங்க அல்லது விற்க சகல கணக்கியல் சேவைகளுக்கு
- தனிப்பட்ட மற்றும் வர்த்தகக்கடன்களை திரும்பக்கட்ட முடியாவிடின் சட்டத்திற்குட்பட்ட மாற்று ஆலோசனைகளுக்கு இன்றே நாடுங்கள்
- தனிநபர் கணக்குகள்
- வியாபாரக் கணக்குகள்
- வரித் திட்டமிடல்
- Credit Card சிக்கல்கள்
- Personal Bankruptcy
- வியாபார நிதி
- வரிப்பணம் மீளப்பெறல்



Telephone 020 8882 2333 Fax 020 8882 0328

45 Chandos Avenue, Southgate, London N14 7ES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம்

**London Anglo Tamil Association.**

வட இலண்டன் தமிழ் பாடசாலை

**North London Tamil School**

LATA Est. 1989.

# 23ம் ஆண்டுக் கலைவிழா-2012

# 2012

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

*R. Pathmanaba Iyer*
*27-B, High Street,*
*Plaistow*
*London E13 0AD*

"தமிழ் மொழிக் கல்வியினூடே தாய்நாட்டுப் பற்றினை வளர்த்திடுவோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம் – வட இலண்டன் தமிழ் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும்



இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம் – வட இலண்டன் தமிழ் பாடசாலை மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கீதம்

இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம் - நம்
இனிய தமிழ்ச் சங்கம் வாழிய வாழிய வாழியவே
இயல் இசையுடன் நாடகம் எனவே — நம்
இனிமைத் தமிழின் முத்தமிழ்ச் சுவையை
இன்புறக் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம்
வாழிய வாழிய வாழியவே!

அன்னை மொழியின் மழலையை அகர முதல எழுத்தினை
அன்புத் தமிழின்அறத்தினை ஆய்வுத் தமிழின் ஆற்றலை
பரதக் கலையின் சிறப்பினை - பண்ணிசையின் சுவையினை
பழகு தமிழ்ப் பண்பினை -பரந்த தமிழ் நெறியினை
இன்புடன் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம்
வாழிய வாழிய வாழியவே!

கன்னித் தமிழின் கற்பினை — கவின் தமிழின் வளத்தினை
தெள்ள தமிழ்க் குறளினை தெளிந்த தமிழ் நடையினை
துள்ளு தமிழ்க் கவியினை தூய தமிழ்ச் சொல்லினை
அள்ளு தமிழ் அமுதினை அருந்தமிழ் மொழியினை
இன்புடன் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம்
வாழிய வாழிய வாழியவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம் – நிர்வாகக் குழு உறுப்பினர்கள்




தலைவர்: திருமதி.சந்திரா இரவீந்திரகுமாரன், உப தலைவர் : திரு.க.மதிசூடி, செயலாளர் : திருமதி.சிவா .கேதீஸ்வரன்,
உப செயலாளர் : திரு.த. பிரபாகர், பொருளாளர் : திரு. க. புவனேந்திரன், உதவிப் பொருளாளர் : திருமதி. ரூபி பாக்கியநாதா
பாடசாலை நிர்வாகப் பொறுப்பாளர் : திருமதி. தவனேஸ்வரி தர்மராஜா, உதவி நிர்வாகப் பொறுப்பாளர் : திரு. ச. சோதீஸ்வரன்
நிர்வாக சபை அங்கத்தவர்கள் : திருமதி. சு. பாலரஞ்சன், திருமதி. ச. யோககுமார்,
விளையாட்டுத்துறை பொறுப்பாளர் : திரு.க. குணரட்ணம்

### தமிழ் ஆசிரியர்களும் மேல்நிலை மாணவர்களும்



### தமிழ் ஆசிரியையும் இடைநிலை மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)

இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)

61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org

# ஆசியுரையும் வாழ்த்துரையும்

**வடஇலண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணை நிற்க**

வட இலண்டன் ஆங்கிலோ தமிழ் பாடசாலையில் 23 ம் ஆண்டு கலை விழாவில் ஆசியும் வாழ்த்தும் கூறுவதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறோம். கடந்த 23 ஆண்டுகளாக பல்வேறு காலப்பகுதியில் நிர்வாக பணியாற்றிய அன்பர்களுக்கும் அவ்வவ் கால அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

நமது தாயகத்தில் ஏற்பட்ட சூழ்நிலையில் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் புலம் பெயர்வு ஏற்பட்டது. நாம் இவ்வுலகின் எங்கு வாழ்ந்தாலும் நாம் அனைவரும் ஈழத்தவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். நாம் எங்கு வாழ்ந்தாலும் நமது மொழி கலாச்சார பண்பாடுகளை விட்டகலாமல் வாழும் போது தான் நாம் நம்மை உலகின் முன் அடையாளப்படுத்த முடியும். நாம் நம் முகவரியை அடையாளப்படுத்த வேண்டும் அல்லது அடையாளப்படுத்தலுக்கான விடாமுயற்சியை கைக்கொள்ள வேண்டும். இல்லை எனின் எமது இனத்தின் அடையாளத்தை தொலைத்துவிட நேரும். இத்தகைய உயரிய முயற்சியைத்தான் வட இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம் கடந்த 23 ஆண்டுகளாக செய்து வருகின்றது.

நமது எதிர்கால சந்ததியினருக்கு நமது மொழி மற்றும் கலாச்சார விழுமியங்களின் பெருமைகளை அறிய செய்திடுவோம். அதனூடாக தாயக பற்றை வளர்த்திட முடியும். நம்முடைய சந்ததியினர் தற்போது பல்துறை சார்ந்த விடயங்களில் முன்னேறியுள்ளதை நாம் அறிவோம். அவ்வாறே நமது தாயக பண்பாடுகளை அவர்களூடாக உலகறியச் செய்ய உலகந்தோறும் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் முன்வர வேண்டும். இவ்வகையில் வட இலண்டன் ஆங்கில பாடசாலையும் உயரிய பணியை ஆற்றிவருகின்றது. வட இலண்டன் ஆங்கிலோ தமிழ்ப் பாடசாலையின் வளர்ச்சிக்கு என்றும் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயமும், இந்து தமிழ் கலாச்சார சங்கமும் (என்பீல்ட்) உறுதுணையாக நிற்கும் எனக் கூறி நல்லாசிகளையும், நல்வாழ்த்துக்களையும் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ்க்கல்வியூடாக
தாயகபற்றை வளர்ப்போம்

**வாழ்க வளமுடன்**

Hindu Tamil Cultural Association (Enfield) 61-65 Church Lane, Edmonton, London N9 9PZ

.................................

பிரதம குரு

**"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW KANNAN STORES

இலங்கை, இந்திய மற்றும் ஆபிரிக்க உணவு வகைகள்





Fresh Products • Fair Price • Friendly Service



251 B Fore Street,
Edmonton. N18 2TY
0208 884 4979





# CFC

Sri Lankan & South Indian Food Take Away

open under new management with a limited seatings for Eat-in Customers.

String Hoppers Deal
100 String Hoppers, Sothi, Sambal &
Potato Curry only £15. Collection Only.

**Free Delivery**

Minimum order £12 within 2 miles radius

All day vegetble Buffet £3.95

020 8364 8500

Www.ceylonfc.com

92 East Barnet Road, New Barnet, EN4 8RQ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A message from the former Head Teacher



I am privileged to be asked to write a few words for the North London Tamil School's annual report for 2012, as one of the school's founder member. The school started in 1989 at Bettenham Junior School, to help the Tamil children learn and understand the literacy and cultural heritage of their root to integrate easily within the multicultural society we are in and to introduce our culture to the society. The techniques and knowledge the students gained also helped them with their studies and the progress they made in the main stream and further. The funds to run the school came from donations from well wishers and parents.

It was supplemented by collections from annual 'Dinner and Disco' organised by the school which was conducted by the members of LATA, the parents, teachers and students themselves. Children were taught the Tamil Language and Literature, Music (Karnatic), Dance (Bharatha Natyam) and Miruthangam by professionals. The parents, staff and students enjoyed the annual outings and the celebrations of religious festivals. Our children also took part in interschool competitions in sports and literacy.

From the very beginning our inspirational staff members strived to maintain the high standard of teachings and care in our school and this is what made the school and its' students a success.

My best wishes for LATA Members, Teachers and Students.

**Thiruppathy.N**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KNM Building Ltd

Building Construction Contractors



Mob:07957403219 • Tel:0208574251

Email:satha1@live.co.uk • 36 Allendale Avenue, Southall, Middlesex, UB1 2SL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிவிழா கண்டு நூறாண்டு காண்பீர்!



லண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கத்தின் வட இலண்டன் தமிழ்ப்பாடசாலையின் 23வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். தமிழ் வளர்த்தல் என்பது மகிழ்ச்சி தரும் செயல். 23வருடமாகத் தமிழ் வளர்த்தல் என்பது பெருமிதம் தரும் செயல். இதனாலேயே இத்தகைய சிறப்புடைய தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த விழாவில் கலந்து கொள்ளுவது மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளிக்கிறது.

தமிழ் என்றதுமே தமிழ் வெறுமனே தொடர்பு ஊடகம் அல்ல. தமிழ் தமிழர்களின் வாழ்வாதாரம். தமிழ் உயர்ந்தால் தமிழன் உயர்வான். தமிழ் தாழ்ந்தால் தமிழன் தாழ்வான். இந்தத் தமிழனாகத் தமிழனை வாழவைக்கும் சக்தியையே தமிழ் மரபு என்பர். 'மாற்றருஞ்சிறப்பின் மரபு' என்பது தொல்காப்பியம் மரபைப் போற்றும் தன்மையை வெளிப்படுத்துகிறது. காலந்தோறும் இடந்தோறும் வழக்குத் திரிந்தவற்றிற்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமை" மரபு என்பது நச்சினார்க்கினியர் வாக்கு. அதாவது எக்காலத்தில் எவ்விடத்தில் தமிழர் வாழ்ந்தாலும் அக்காலத்தின் அவ்விடத்தின் தன்மையையும் பேணிய நிலையில் தமிழரின் மரபையும் அதற்கேற்ப உயிர்ப்பிக்கும் ஆற்றல்தான் இன்று வரை தமிழும் தமிழரும் உலகில் நிலைபெறக் காரணமாக உள்ளது. இதில் தவறின் அதாவது 'மரபு திரிந்தால் பிறிது பிறிதாகும்' என்பது தொல்காப்பியர் அனுபவமொழி. மரபைப் பேணுவதற்கு பழமையின் சிறப்பு உணரப்பட அறியப்பட வேண்டும். ஆனால் பாரதி பழமை பழமை என்ற பாவனை பேசலன்றிப் பழமை இருந்த நிலை பாமரர் ஏதறிவார்" என்று கூறியது இன்றும் பொருந்தும். பழமையின் சிறப்பினை உணர்ந்திட தமிழ்க்கல்வி தமிழிலக்கியம் தமிழர் ஆன்மிகம் என்பனவற்றின் ஒருங்கிணைந்த அறிவு அவசியம். இதனைச் செய்திடும் அதே வேளையில் பவணந்தி முனிவரின் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பதையும் கவனத்தில் கொண்டு செயற்பட்டாலே உயிர்த்துடிப்புள்ள வாழ்வாகத் தமிழர் வாழ்வு அமையும்.

இந்தப் பெரும் பணி தமிழ்ச்சங்கங்களினதும் தமிழ்ப்பாடசாலைகளினதும் முன்னுள்ள பெரும் கடமை. 1989ல் இந்தத் தமிழ்ப்பாடசாலையினைத் தொடங்கிய காலத்துத் தமிழர்களின் தேவையும் எதிர்பார்ப்புகளும் வேறு. இன்றைய காலத்துத் தேவைகளும் எதிர்பார்ப்புகளும் வேறு. இதனை உணர்ந்து மரபையும் பேணி காலத்திற்கும் ஏற்ப வாழவும் பயிற்சி அளிக்கும் உங்கள் பணி தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி உங்கள் 23வது வருடாந்த விழா சிறப்புற வாழ்த்துகின்றேன். வெள்ளி விழா கண்டு நூறாண்டு பணிபுரிவீர்கள் இது உறுதி.

நீற்றா பற்றிமாகரன் **BA, BSc, PG Diploma(Social Policy,PG Diploma(Housing)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் செய்தி

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு"**



இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் நடாத்தும் வட இலண்டன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களின் 23ம் ஆண்டுக் கலைவிழா நிகழ்வின் ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்!

ஆங்கில மொழிச்சூழலும், அந்நிய கலாச்சாரச் சூழலும் நிறைந்த இங்கிலாந்து மண்ணிலே, இலண்டனின் வடக்குப் பகுதியிலே வாழும் பெரும்பான்மையான தமிழ்ச்சிறார்களின் நன்மை கருதி, தாய்மொழிக்கல்வியான தமிழ் மொழியையும் தமிழரின் அருங்கலைகளையும் அவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தில், பெருமனது கொண்ட சில சமூகநலன் விரும்பிகளினால் 1989ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம் இன்று வரை சிறப்பாக இயங்கி வருவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் அவர் தம் முயற்சியையிட்டுப் பெருமைப்படுகிறேன். இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 23 ஆண்டுகள் வரை சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், எமது சங்கத்தின் ஆரம்பகர்த்தாக்களையும், கடந்த கால நிர்வாக உறுப்பினர்களையும், பெற்றோர்களையும் பழைய மாணவர்களையும் பெருமையுடனும் நன்றியுடனும் நினைவு கொள்கிறேன்!

நாம் எமது சொந்த நாட்டை விட்டு வெளியேறி, இந்த அந்நிய மண்ணில் வாழ நிர்ப்பந்திக்கபபட்டிருக்கும் இந்த அவலமான சூழ்நிலையிலும் எமது தாய்மொழியான தமிழையும், எமது பாரம்பரிய கலைகளில் சிலவற்றையேனும் காப்பாற்றியாக வேண்டிய பாரிய பொறுப்பு பெற்றோர்களான எமது அனைவரின் கைகளிலும் தான் உள்ளது. இங்கு பிறந்து வளரும் தமிழ்ச்சிறார்கள் தமிழ் பேசவும், தமிழில் எழுதவும், தமிழில் வாசிக்கவும் எவ்வாறான முறையில் தமிழைப் போதிக்க முடியுமோ அவ்வாறான முறையில் நாம் அவர்களுக்குக் கல்வியை ஊட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்கான வழிமுறைகளை பாடத்திட்டங்களை நல்கும் தமிழர் பொருண்மிய மேம்பாட்டுப் பேரவைக்கும், அதனைப் பொறுமையுடன் கற்பிக்கும் எமது ஆசிரியர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்து சகல தொண்டுகளையும் ஆற்றும் எமது நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் நான் இத்தருணம் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்து போன 23 வருட காலங்களில் எமது சங்கமும் பாடசாலையும் அவ்வப்போது சந்தித்துக் கொண்ட இடர்பாடுகளும், நிர்வாகக் குழுவினரினதும் பெற்றோர்கள் சிலரினதும் கடின தொண்டுகளும் என்றும் மறக்க முடியாதவை. அனைவரினதும் அயராத உழைப்பின் முன்னாலும், எமது மாணவர்களினது திறமைகளின் முன்னாலும், கஷ்டங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனியாகக் கரைந்து போய்விட்டிருக்கிறது! எமது கடின உழைப்பின் அறுவடையாக நாம் எதிர்பார்ப்பதெல்லாம், இவ் அந்நிய மண்ணில் வாழும் எமது அடுத்த சந்ததியினரின் தமிழ் மொழி வளர்ச்சியும், எமது பாரம்பரிய கலை பண்பாடுகளின் அடையாளப் பாதுகாப்பும் தான்! இதுவே இவ் உலகில் எம் இனத்தின் அடையாளத்தைப் பாதுகாக்கத் தேவையான, நாம் செய்ய வேண்டிய முதற் பணியாகும். அதையே நாம் இச்சங்கத்தின் ஊடாக முழுமுயற்சியோடு எம்மாலானவரை செய்து கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது சங்கத்தின் சார்பாக நான் சிலருக்கு நன்றிகள் கூற வேண்டிய கடமைப்பாட்டில் இருக்கிறேன். அந்த வகையில், எமது சங்கத்தின் செயற்பாடுகளிற்கும், பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் நட்புரிமையோடு பல வகைகளிலும் தமது ஆதரவை நல்கும் என்பீல்ட் இந்து தமிழ்க்கலாச்சார சங்கத்தினருக்கும், எமது இந்த 23ம் ஆண்டுக் கலைவிழா நிகழ்வினை சிறப்பாக நடாத்துவதற்கு நன்கொடைகள் மூலமாக ஆதரவு நல்கிய நண்பர்கள், அன்பர்கள், சமூகநலன் விரும்பிகள், தமிழ் காக்கும் தொண்டர்கள், மற்றும் விளம்பரங்கள் தந்து ஆதரவு நல்கிய வர்த்தகப் பெருமக்கள் யாவருக்கும் இத்தருணம் எமது சங்கத்தின் சார்பாக என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்!

மேலும் இம்முறையும் எமது 23ம் ஆண்டுக் கலைவிழா மலருக்கு அழகிய அட்டைப்படத்தினை வரைந்து தந்த ஓவியர் மூனா அவர்களுக்கும், மற்றும் விழாவினை சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய எமது நிர்வாக உறுப்பினர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இத்தருணம் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக்கொண்டு, தொடர்ந்து எமது சங்கமும் அதன் கீழ் இயங்கும் தமிழ்ப்பாடசாலையும் மென்மேலும் வளர்ந்து, எமது தமிழ்ச்சிறார்களினூடாக ஒரு தலைசிறந்த தமிழ்ச்சமுதாயம் இங்கு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் அனைவரும் ஒருமித்த கருத்தோடு ஒன்றுபட்டுப் பணியாற்றுவோம் என்று கூறி இனிய வணக்கங்களோடு விடைபெறுகிறேன்!

நன்றி

**தமிழ் மொழிக் கல்வியினூடே தாய்நாட்டுப் பற்றினை வளர்த்திடுவோம்"**

**தலைவர்**

**திருமதி. சந்திரா இரவீந்திரகுமாரன்**
**இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் உரை



இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 23வது அகவையை நிறைவு செய்வதை முன்னிட்டு நடாத்தப்படும் இந்த ஆண்டு கலைவிழா நிகழ்வுகளின் மூலம இனிய உள்ளங்களான உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிடைத்ததை இட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்.

23 வருடங்களை இனிதே பூர்த்தி செய்த எமது இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் மென்மேலும் சிறப்புடன் வளர்ந்து அதன் மூலம் எமதருமைக் குழந்தைகள் நிறைவான பயன்களை அடைய வேண்டும் என்றும் அதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும் என்றும் வேண்டி என் மனமார வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலைக்கென்று ஒரு தனிப்பெருமை உண்டு. அது என்னவென்றால் மற்றைய பாடசாலைகள் போலல்லாது முதன்முறையாக பெற்றோர்களால் நடாத்தப்பட்ட, இன்றும் நடாத்தப்படுகின்ற தமிழ்ப்பாடசாலை என்ற பெருமை எமது பாடசாலைக்கே சேரும். எமது பாடசாலை தனிப்பட்ட ஒருவரால் நடாத்தப்படாமல் எமது பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோர்களால் அவர்களுள்ளே நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு ஒரு குடையின்கீழ் ஒரு குடும்பம் போன்று இயங்கிவருகின்றது. நிர்வாகசபை உறுப்பினர்கள் தமக்கிருக்கும் எத்தனையோ வேலைகளின் மத்தியிலும் எமது பாடசாலையின் நன்மை கருதி பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் சேவைபுரிந்து வருகிறார்கள். அவர்களுடன் சேர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலனில் அக்கறையுடைய பங்களிப்பாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரின் உதவியோடும் எங்கள் பாடசாலை சிறப்புடன் இன்றுவரை இயங்கிவருகின்றது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறே சிறப்புடன் இயங்குவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் ஆதரவும் என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, அவர்களுக்கு நன்றியும் கூறக்கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக எமது பாடசாலை வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிகின்ற என்பீல்ட் இந்து தமிழ்க் கலாச்சார சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் இத்தருணம் என் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

எமது பாடசாலை எம் வருங்கால சமுதாயத்திற்கு எமது தாய்மொழியான தமிழையும், இன்கலைகளையும் அத்தோடு நற்பண்புகளையும் ஊட்டி வளர்ப்பதோடு, அவர்களை ஒரு உயர்ந்த இடத்திற்கு உயர்த்துவதற்குரிய ஏணிப்படிகளில் ஒன்றாக எமது பாடசாலை இருப்பதையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

எமது இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கத்தின் 23வது ஆண்டு கலைவிழா சிறப்புற நடைபெறுவதற்கு எல்லாவகையிலும் உறுதுணையாகவும், ஆதரவாகவும் இருந்து எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய எல்லா அன்பு உள்ளங்களிற்கும், நிறுவனங்களுக்கும் எமது சங்கத்தின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி வணக்கம்

**செயலாளர்**
**சிவசக்தி கேதீஸ்வரன்**
**இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக பொறுப்பாளரின் இதயத்திலிருந்து



எட்மண்டனில் சிறப்பாக இயங்கிவரும் எமது வட இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கத்தின் நிர்வாக பொறுப்பாளராக இருப்பதில் நான் மிகவும் பேருவகை அடைவதுடன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகளின் முத்தமிழ் கலைபங்களிப்புடன் 22வது வருடாந்த கலைவிழாவை நிறைவு செய்வதற்கும் எமது பாடசாலை மேன்மேலும் வளர எனது இதயபூர்வமான ஆசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது பாடசாலை நிர்வாகத்தினரதும், பெற்றோர்களினதும், ஒத்துழைப்போடு எமது மாணவ மாணவிகள், தமிழர் மேம்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் தமிழ்மொழிப் பரீட்சையிலும், கலைப்பாடத் தேர்வுகளிலும் பங்குபற்றிச் சிறந்த சித்திகளை அடைந்து தம்மாலான திறமைகளை வெளிப்படுத்தியிருந்தது பாராட்டத்தக்க விடயமாகும்.

அதுமட்டுமல்லாது எமது பாடசாலையில் தைப்பொங்கல், நவராத்திரி விழாஇ சித்திரை வருடப்பிறப்புஇ நத்தார் பண்டிகை, துள்ளிசைவிழா, விளையாட்டுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளும் இனிதே நடாத்தப்பட்டு வருகின்றன. இதற்கு பெற்றோர்களினதும் பாடசாலை நலன்விரும்பிகளினதும் ஒத்துழைப்பும் ஆதரவுமே காரணமாகும்.

யாராலும் அழிக்கமுடியாத தழிழ் கல்விச்செல்வத்தையும் எமது கலைப்பண்பாட்டு விழுமியங்களையும் சகல மாணவர்களுக்கும் கிடைக்கும் வகை செய்வதற்கு ஆசிரியர்களும், நிர்வாக உறுப்பினர்களும்இ பெற்றோர்களும் ஒருங்கிணைந்து செயற்படுவோம்.

மேலும் எமது பாடசாலை மாணவர்களின் மேம்பாட்டினை கருத்திற்கொண்டு தாங்கள் அனைவரும் உதவியுமஇ ஊக்கமும்இ பங்களிப்பும் தந்து எமது பாடசாலை மேன்மேலும் வளர கரம் கொடுப்பீர்கள் என நம்புகின்றேன்.

**'தமிழ் மொழிக் கல்வியினூடே தாய் நாட்டுப் பற்றினை வளர்த்திடுவோம்.'**

**நிர்வாக பொறுப்பாளர்,**
**திருமதி தவனேஸ்வரி தர்மராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலண்டன் தமிழ் பாடசாலை
# தலைமை ஆசிரியரின் வாழ்த்துச் செய்தி!



அன்பான மாணவர்களே, பெற்றோர்களே, ஆசிரியர்களே, இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு அங்கத்தவர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

கருவாய் கிடந்து அவன் கழலே நினைந்து அருந்தமிழ் நெறி பரப்ப இலண்டனில் ஓர் பள்ளி இருந்தமிழின் செய் உள் மேன்மையால் அமைய பெருமை கொள் இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் உருவாய் மலர்ந்து தமிழ் இயல் இசை நாடகம் அரும் முத்தமிழ் புகட்டி பல ஆண்டுகள் பறந்தனவே!

வளரும் வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை அளப்பரும் தமிழ் கல்வி ஆலமரம் போல் செழிக்க வளர்க்கும் இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் வளர்க வாழ்க அறம் பொருள் இன்பம் பார்தனில்!

அன்பே சிவம்

தொண் அறம்.

**தலைமை ஆசிரியர்**
**திரு. சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன்**
BSc.Miet (Researcher and Teacher of Tamil Language and Sciva Religion)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம்
## வட இலண்டன் தமிழ் பாடசாலை
23ம் ஆண்டுக் கலைவிழா 03-11-2012

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல் | |
| அக வணக்கம் | |
| சங்ககீதம் | பாடசாலை மாணவர்கள் |
| ஆசியுரை | சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் |
| வரவேற்புரை தமிழ் | செல்வி சியாமி புவனேந்திரன் (ஆண்டு-7) |
| வாய்ப்பாட்டு | கீழ்ப்பிரிவு மாணவர்கள் |
| பேச்சு (தங்கம்மா அப்பாக்குட்டி) | ஹரிசன் முரளிதரன் (வளர்நிலை-2) |
| அபிநயப்பாடல் - தாயின்மொழி தமிழைப்படி'' | சிறுவர் நிலை |
| பேச்சு – அன்னையும் பிதாவும்'' | பிருந்தா ஜெகதீஸ்வரன் (வளர்நிலை-4) |
| சிங்கமும் முயலும்'' அபிநயம் | வளர்நிலை-1 மாணவர்கள் |
| ஐம்பெரும் காப்பியங்கள்'' பேச்சு | செல்வி. லக்ஷிகா ஜெகதாசன் (ஆண்டு-5) |
| வாய்ப்பாட்டு | மத்தியபிரிவு, மேற்பிரிவு மாணவர்கள் |
| பேச்சு – கல்வி'' | திசானா கிருபாகரன் (ஆண்டு-5) |
| நாட்டுப்புறக் கிராமியப்பாடல்கள் | வளர்நிலை-2 மாணவர்கள் |
| கவிதை – தெய்வம் ஊமையானதேன்'' | வளர்நிலை-3 மாணவர்கள் |
| மிருதங்கம் வயலின், விசைப்பலகை | பாடசாலை மாணவர்கள் |
| நடனம் | கீழ்ப்பிரிவு மாணவர்கள் |
| கவிதை கல்வி'', செய்தித்தாள் | சாகித்தன் சோதீஸ்வரன், நர்த்தனா பாஸ்கரன் |
| தனிநடிப்பு (அப்பா நாளை வருவாரோ) | திசானா, பிருந்தா, லக்ஷிகா, தஸ்மிதா |
| பேச்சு- செந்தமிழும் அதன் சுவையும் | செல்வி. துளசிகா பாலசந்திரன் (ஆண்டு-8) |
| வரவேற்புரை ஆங்கிலம் | சர்மிலன் சர்வானந்தன் (ஆண்டு-5) |
| தாளலய நாடகம் (நடுக்கடலிலும் நாம் நடப்போம்) | பாடசாலை மாணவர்கள் |
| பிரதமவிருந்தினர் உரை | திருமதி. நீற்றா பற்றிமாகரன் |
| சிறப்பு விருந்தினர் உரை | Deputy Mayer of Enfield- Chaudhury Anwar |
| தலைவர் உரை | திருமதி. சந்திரா இரவீந்திரகுமாரன் |
| தலைமை ஆசிரியர் உரை | திரு. சுந்தரம்பிள்ளை சிவச்சந்திரன் |
| நடனம் | மத்தியபிரிவு மாணவர்கள் |

**இடைவேளை**

| | |
|---|---|
| செயலாளர் நன்றியுரை | திருமதி. சிவா கேதீஸ்வரன் |
| சங்கிலியன்'' நாடகம் | பாடசாலை மாணவர்கள் |
| அதிட்ட இலாபச் சீட்டிழுப்பும் பரிசில்கள் வழங்கலும் | |
| சான்றிதழ்களும் பாராட்டு விருதுகளும் வழங்கல் | |
| நடனம் | கீழ், மத்திய, மேற்பிரிவு மாணவர்கள் |

மேடை அறிவிப்புகள் செய்யும் மாணவர்கள்:-

**செல்வி. தர்ஷியா இரவீந்திரகுமாரன் (ஆண்டு 9), செல்வி. சுவேதா சுந்தரமூர்த்தி (ஆண்டு 9), செல்வன். நிதாரன் புவனேந்திரன் (ஆண்டு 9), செல்வன். தகீஸ் தர்மராஜா (ஆண்டு 9), செல்வி. துளசிகா பாலச்சந்திரன் (ஆண்டு8), செல்வன். ரகீதன் ஜெகதீஸ்வரன் (ஆண்டு 8).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# London Anglo Tamil Association
# North London Tamil School

23rd Year KalaVizha 03-11-2012

## PROGRAMME

| | |
|---|---|
| Lighting of the Oil Lamp | |
| Salutation | |
| Sanga Geetham | School Children |
| Blessing | Sivasri Kamalanatha Kurukkal |
| Welcome Speech(Tamil) | Shiyami Puvanendran |
| Vocal | Junior Students |
| Speech(Thangammah Appakuddy) | Harisan Muraleetharan |
| Apinayam Song (Thaayin Molizhi) | Siruvar Nilai) |
| Speech(Mother and Father) | Biruntha Jegatheeswaran |
| Lion and Rabbit (Apinaya Drama) | Valarnilai-1 Students |
| Speech | Luxika Jegathasan |
| Vocal | Middle, Upper Class Students |
| Speech (Education) | Thishana Kirupakaran |
| Village Songs | Valarnilai- 2 Students |
| Poetry (Theivam Oomaiyanathean) | Valarnilai- 3 Students |
| Miruthangam, Violin, Keyboard | Junior, Middle, Upper Class Students |
| Dance | Junior Students |
| Poetry (Education, News Paper) | Sakithiyan Sotheeswaran, Narthana Baskaran |
| Solo Performance (Appa Naalai Varuvaaro) | Thishana,Biruntha,Luxika,Thasmitha |
| Speech (Senthamilum Athan Suvaiyum) | Thulasika Balachandran |
| Welcome Speech (English) | Sharmilan Sarvananthan |
| Thala Layam Drama (Nadukadalilum Naam Nadappom) | School Students |
| Chief Guest Speech | Mrs.Rita Fatimaharan |
| Special Guest Speech | Deputy Mayer of Enfield, London- Chaudhury Anwar |
| Chairman's Speech | Mrs.Chandra Ravindrakumran |
| Head Teacher Speech | Mr.S.Sivachandran |
| Dance | Middle Gro |

**Interval**

| | |
|---|---|
| Secretary Thanks Speech | Mrs.Siva Ketheeswaran |
| Drama "Sankiliyan" | School Students |
| Raffle Ticket and Prize giving | |
| Certificates and Awards giving | |
| Dance | Junior, Middle and Upper Class Students |

**Stage Anouncing-**

**Tharshia Ravindrakumaran, Suwetha Sundaramoorthy, Thulashika Balachandran, Nitharan Puvanendran, Thakees Tharmarajah, Raheethan Jegatheeswaran.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம்

# London Anglo Tamil Association.

வட இலண்டன் தமிழ் பாடசாலை

**North London Tamil School**

LATA Est

எமது பாடசாலை
தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் இடம்

**Wilbury Primary School**
**Wilbury Way**
**Edmonton**
**London**
**N18 1DE**

எமது பாடசாலையில் தற்பொழுது சிறுவர் நிலையிலிருந்து ஆண்டு 9 வரையான தமிழ் வகுப்புகளும் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழிப் பரீட்சைக்குரிய விசேட வகுப்புகளும் மற்றும் கலைப்பாட வகுப்புகளும் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரை நடைபெறுகின்றன.

தமிழ் கற்க விரும்பும் மாணவர்களை நாம் இருகரம் கூப்பி அன்போடு வரவேற்கிறோம்.

---

பாடசாலையின் நிர்வாகப்பொறுப்பாளர்
**Tel:- 07949880508**

சங்கச் செயலாளர் தொடர்பிலக்கம்
**Tel:- 07956486413**

**email:- londonanglo@hotmail.co.uk**

---

"தமிழ் மொழிக் கல்வியினூடே தாய் நாட்டுப் பற்றினை வளர்த்திடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியின் அவசியம்



எனது பெயர் றகீதன் ஜெகதீஸ்வரன். எனக்குப் பதினாறு வயது. நான் வட இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் ஆண்டு 8 படித்துக் கொண்டிருக்கிறேன்.

புலம் பெயர்ந்து வாழும் எமது சமூகம் எங்கு வாழ்ந்தாலும் எமது தாய்மொழியாகிய தமிழை சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுத்து வருகின்றார்கள். இங்கு வாழும் சிறுவர்கள் தம் தாய் மொழியாகிய தமிழை பேசவும் எழுதவும் வாசிக்கவும் தெரிந்திருந்தால் தான், அந்நாட்டுப் பிறமொழிகளை அவர்கள் கற்பதற்கு அது இலகுவாக இருக்கும். வருந்தத்தக்க விடயம் என்னவென்றால் இன்னமும் நம்மிடையே சிலர் நம் தாய்மொழியாகிய தமிழை தமது சிறார்களுக்குக் கற்றுக் கொடுக்காமல் இங்கு வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழ் மொழி மட்டுமல்லாது தமிழர் கலைகளையும் நாம் கற்பதால் எமது பண்பாடும் அடையாளங்களும் இங்கே பாதுகாக்கப்படுகிறது. இதற்கமைய நாம் எமது தமிழ் பாடசாலையில் வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், விசைப்பலகை ஆகியவற்றைக் கற்று வருகிறோம். அத்துடன் தமிழர் பண்டிகைகளான சித்திரை புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல் விழா, நவராத்திரி விழா, நத்தார் விழா ஆகியவையும் எமது தமிழ்ப் பாடசாலையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனால் இப்பண்டிகைகள் பற்றி சிறார்களான நாம் அறிந்து கொள்வதோடு அத்தினங்களில் எமது கலைத்திறமைகளையும் வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பமாக அது அமைகிறது.

புலம் பெயர் நாடுகளில் வாழும் எமது சிறார்கள் வெவ்வேறு நாடுகளில் வாழும் எமது உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லும் போது, அந்தந்த நாட்டு மொழிகளை மட்டுமே தெரிந்திருக்கும் சிறார்கள் தங்களுக்குள் பேசமுடியாமல் இருப்பார்கள். எனவே நாம் உலகின் எப்பாகத்தில் இருந்தாலும் எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியைக் கற்று வைத்திருந்தால் அதுவே எமக்கு ஒரு பெரும் உறவுப்பாலமாக அமையும் என்பதை நாம் உணர வேண்டும்.

எனவே புலம்பெயர் மண்ணில் வாழும் எம் தமிழ் சிறார்கள் தமிழ்மொழியை அவசியம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நன்றி

**செல்வன் றகீதன் ஜெகதீஸ்வரன்**
**ஆண்டு 8**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம் பெயர் நாடுகளில் தமிழ் மொழி

## நாமில்லா நாடில்லை நமக்கென்றொரு நாடில்லை"



என்ற ஈழத்தமிழர்களின் தங்கத்திற்கிணங்க நமது நாட்டிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றார்கள். அவர்கள் சென்ற இடமெல்லாம், எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை புலம் பெயர் நாடுகளில் வாழும் இளம் சிறார்களுக்கு பயிற்று விப்பதற்காகவும், தமிழ் மொழியை வளர்ப்பதற்காகவும் பல தமிழ்ப் பாடசாலைகளை நிறுவி, தமிழைப் பயிற்றுவிக்கிறார்கள். எமது அடுத்த சந்ததி தாய் மொழியை மறந்து விடக்கூடாது என்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இப்பணி மிக மிக முக்கியமானதும் வரவேற்கத் தக்கதாகவும் இருப்பதையிட்டு பெருமிதம் அடைகிறோம்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடச் செய்தல் வேண்டும்" என மகாகவி பாரதியார் கண்ட அன்றைய கனவு இன்று நனவாக்கப்பட்டுள்ளது கண்டு பெருமை அடைகிறோம். எமது வருங்கால சந்ததியினருக்காக உருவாக்கப்பட்ட இப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், நிர்வாகிகள் அனைவரும் தம்மை இந்தப் பணிக்காக அர்ப்பணித்திருக்கிறார்கள். எத்தனையோ துன்பங்களிற்கு மத்தியிலும் இப்பணியை பெரிய தொண்டாக எண்ணிச் செயற்படுவது மிகப் பெரும் சாதனையாகும்.

ஆண்டு தோறும் இடைக்காலப் பரீட்சை, பொதுப்பரீட்சை ஆகியன நடாத்தி மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவிக்கும் நிலை கண்டு பிறநாட்டவர்கள் மூக்கின் மேல் விரல் வைக்கிறார்கள். இருந்த போதிலும் நம்மவர்களில் சிலர் பிறப்பிலிருந்தே ஆங்கிலேயர்கள் போல வீடுகளிலும் பொது இடங்களிலும் ஆங்கிலத்தையே பேசுவதோடு, தமது பிள்ளைகளுக்கும் தாய் மொழியான தமிழைச் சொல்லிக் கொடுக்காமல் ஆங்கில மோகத்துடன் வாழ்கிறார்கள். தமிழில் பேசுவது ஒரு நாகரீகமற்ற செயல் போலப் பாவனை செய்கிறார்கள். எங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது என்று சொல்லிக் கொள்வதில் அவர்களுக்கு ஒரு அலாதிப்பிரியம். அத்துடன் பிள்ளைகள் தமிழைப் படிக்கத் தொடங்கினால் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் அடைய மாட்டார்கள் என்றும் ஒரு தவறான கருத்தினைக் கூறுகிறார்கள். ஆனால் 10 வயதிற்குட்பட்ட ஒரு சிறு பிள்ளையின் மூளை ஒரே நேரத்தில் நான்கு மொழிகளைக் கிரகிக்கத்தக்கதென ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இந்தக் கூற்றிற்கமைய தமிழ்ப் பெற்றோர்கள் அனைவரும் தாய்மொழியாம் தமிழ் மொழியை தம் பிள்ளைகட்கு ஊட்டுதல் அவசியம்.

எவ்வாறாயினும் புலம்பெயர் நாடுகளில் தமிழைக் காக்கவும் வளர்க்கவும் பலரும் அரும்பாடுபடுகிறார்கள் என்பதில் ஐயமில்லை. இப்பணி தொடர வேண்டும். அழியாப் புகழுடன் அருந்தமிழ் வாழ வேண்டும்!

**வாழ்க தமிழ்! வாழ்க தமிழ் மக்கள்!**
**தொடரட்டும் நம் பணி!**

-துளசிகா பாலச்சந்திரன் (ஆண்டு 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு



எனது பெயர் நிதாரன் புவனேந்திரன். எனது தாய் மொழி தமிழ். வட இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் 2002ம் ஆண்டிலிருந்து தமிழ் மொழியுடன் கலை மற்றும் உதைபந்தாட்டம் போற்றவற்றை கற்றுவருகிறேன்.

கற்க கசடற என்றார் வள்ளுவர். கல்வியை கற்கும்போது ஐயந்திரிபுற கற்கவேண்டும் என எண்ணி என் பெற்றோர் ஆறு வயதிலேயே வட இலண்டன் தமிழ்பாடசாலையில் என்னை இணைத்தனர். எனினும் துள்ளித் திரிந்து துடுக்கடித்து விளையாடும் பருவத்தில் கல்வியின் சிறப்பை நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக என்வளர்ச்சிக்கு பாடசாலை ஆசிரியர்களும் நிர்வாகமும் காட்டிய அன்பாலும் அக்கறையாலும் எம்மொழியின் சிறப்பை உணரத்தொடங்கினேன்.

'கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்ற வரிகளும் 'கேடில் விழும் செல்வமும் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை' என்ற குறளும் கல்வியின் அருமையை எமக்கு நன்குணர்த்துகின்றன.

கல்வி என்பது நமது கண்போன்றது. கண் உடலுக்கு எவ்வளவு முக்கியமோ அதைப் போலவே கல்வி வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. மற்றயவை எடுக்க, எடுக்க குறைந்து கொண்டே செல்லும் ஆனால் அழியாச்செல்வமாகிய கல்விச் செல்வம் தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருக்கும்.

கல்வியின் சிறப்பைப் பற்றிப் பாடிய புலவர்கள் கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு ஆனால் மன்னர்க்கு தன்தேசமல்லாமல் சிறப்பில்லை என்கின்றனர், எனவே மன்னரிலும் கற்றோர் சிறப்புடையராகின்றனர்.

கல்வியானது வெள்ளத்தால் அழியாதது, வெந்தழலால் வேகாதது,
கள்வரால் கவரப்பட முடியாதது, வேந்தராலும் வெல்ல முடியாதது. இம்மையிலும் மறுமையிலும் பயன் அளிக்க வல்லது. அதனை ஈட்டலும் காத்தலும் எளிது. ஆனால் இழத்தல் என்பதே இல்லை.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது'
என்பதற்கிணங்க கல்வியை தக்க ஆசிரியரை நாடி அவரை வெறுக்காது, மதித்து நல்ல கல்வியை கற்றிட ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும் அந்த வகையில் வட இலண்டன் தமிழ் பாடசாலை எம்போன்ற சிறுவர்க்கு நல்ல பயனை தந்து கொண்டிருக்கிறது. கல்வியுடன் எதிர் காலத்திற.கு நிறைய நல்ல நண்பர்களையும், நல்ல பழக்க வழக்கங்கங்களையும் தரும் எமது பாடசாலைக்கு நாம் ஒவ்வொருவரும் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே என் அவா.

**செல்வன். நிதாரன் புவனேந்திரன்**
**ஆண்டு 9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TREASURER'S REPORT

LONDON ANGLO TAMIL ASSOCIATION (LATA)
NORTH LONDON TAMIL SCHOOL
INCOME AND EXPENDITUTRE ACCOUNT
FOR THE PERIOD 13/01/2012 - 14/09/2012

| INCOME | | 2011/2012 CASH BOOK | | | | EXPENDITUTRE | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| DATE | DETAILS | AMOUNT | AMOUNT | | DATE | DETAILS | AMOUNT | AMOUNT |
| 13/01/2012 | B/D Balance | | 3505.16 | | | | | |
| | Contribution from Parents & Book sale | 3153.65 | | | | Rent | 4795.00 | |
| | Tamil Exam Fees for TEDCUK | 1185.00 | | | | Teachers allowance | 2562.33 | |
| | Educational grant fron LBE | 2400.00 | | | | CRB | 42.00 | |
| | Exam fees for OFAAL | 416.00 | | | | LBE (Hall hire for D & D) | 490.00 | |
| | Canteen | 65.90 | | | | DJ For D&D | 275.00 | |
| | Dinner & Disco | 1446.02 | | | | OFFAL Exam fees | 416.00 | |
| | Collection for Hall & DJ (D &D) | 765.00 | | | | Exam fees(TEDCUK) | 1185.00 | |
| | Refund from OFAAL( 2011 Exam) | 140.20 | | | | Other Expences | 414.30 | |
| | Other Income & Donation | 20.00 | 9591.77 | | | | | 10179.63 |
| | | | | | 14/09/2012 | **BALANCE B/F** | | 2917.30 |
| | | | **1396.93** | | | | | **1396.93** |
| 14/09/2012 | BALANCE B/D | | 2917.30 | | | | | |

Mr K Mathisoody
Treasurer(01/12 - 09/12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## அனைத்துலகப் பொதுத் தேர்வு- தமிழ்- 2012

### தேர்வில் அதிசிறப்புப் புள்ளிகளும்,
### சிறப்புப் புள்ளிகளும் எடுத்த
### வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களின்
### பெயர் விபரங்களும் பரீட்சைப் பெறுபேறுகளும்

| பெயர் விபரம் | வகுப்பு நிலை | பெறுபேற்று விபரம் |
|---|---|---|
| கீரன் பிரபாகர் | வளர்நிலை 1 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| விபீஷன் பாஸ்கரன் | வளர்நிலை 1 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| தனுஷ் ஜீவராஜா | வளர்நிலை 1 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| ஹரிசன் முரளிதரன் | வளர்நிலை 1 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| பிருந்தா ஜெகதீஸ்வரன் | வளர்நிலை 2 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| சுவாதிகா தியாகராஜா | வளர்நிலை 3 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| திசானா கிருபாகரன் | வளர்நிலை 4 | அதி சிறப்புப் புள்ளிகள் |
| விதுசிகா துளசிதரன் | வளர்நிலை 1 | சிறப்புப் புள்ளிகள் |
| யுவன் பாலேந்திரன் | வளர்நிலை 1 | சிறப்புப் புள்ளிகள் |
| தஸ்மிதா தங்கராஜா | வளர்நிலை 1 | சிறப்புப் புள்ளிகள் |
| மாதங்கி கோபாலகிருஷ்ணன் | வளர்நிலை 2 | சிறப்புப் புள்ளிகள் |
| அரன் மதிசூடி | வளர்நிலை 3 | சிறப்புப் புள்ளிகள் |
| சுருதிகா தியாகராஜா | வளர்நிலை 3 | சிறப்புப் புள்ளிகள் |
| நவீன் அசோக்குமார் | வளர்நிலை 3 | சிறப்புப் புள்ளிகள் |
| றகீதன் ஜெகதீஸ்வரன் | வளர்நிலை 7 | சிறப்புப் புள்ளிகள் |
| கேசவன் ஜெகதீஸ்வரன் | ஜிசிஎஸ்சி (சாதாரணம்) | சிறப்புப் புள்ளிகள் |

(அதி சிறப்புப் புள்ளிகள் - 90-100 சிறப்புப் புள்ளிகள்- 85-89)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் ஓர் ஈழத்துத் தமிழ் நூலகம்

## இலங்கைத் தமிழரின் 12,000 ஆவணங்களைக் கொண்ட எங்கிருந்தும் எல்லோரும் எந்நேரமும் பயன்படுத்தக்கூடிய மாபெரும் அறிவுக்களஞ்சியம்

# www.noolaham.org

நூலக வலைத்தளம் வெள்ளத்தால், வெந்தணலால் அழிக்கமுடியாத ஓர் எண்ணிம ஆவணக் காப்பகம் (Digital Archive) ஆகும். நூல்கள், இதழ்கள், பத்திரிகைகள், சிறுபிரசுரங்கள், நினைவு மலர்கள், விழா மலர்கள், ஆய்விதழ்கள், பாடசாலை மலர்கள், கல்வெட்டுக்கள் உள்ளிட்ட சகலவிதமான எழுத்தாவணங்களும் உள்ளடக்கப்படுகின்றன. எட்டு ஆண்டுகளில் ஏறத்தாழ 3800 நூல்கள், 4800 இதழ்கள், 2000 செய்தித் தாள்கள், 1300 பிரசுரங்களை நூலக வலைத்தளம் ஆவணப்படுத்தியுள்ளது. 1833 முதல் 2012 வரை 108 ஆண்டுகளில் 2100 க்கும் அதிகமான எழுத்தாளர்கள் 1500 க்கும் அதிகமான பதிப்பகங்களூடாக வெளியிட்ட நூல்கள் இங்கே பதிவாகியுள்ளன.

நூலக வலைத்தளம் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டு இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான நூலக நிறுவனத்தின் ஒரு செயற்றிட்டம் ஆகும். ஆர்வமுள்ளோர் இணைந்து செயற்படுவதனாலேயே இந்நிறுவனம் வளர்ச்சியடைந்து வருகிறது.

எழுத்தாவணங்களை ஆவணப்படுத்துவதோடு நின்று விடாது பாடசாலை மாணவர்களுக்கான தகவல் வளங்களைத் திரட்டி வழங்குதல்; இடங்கள், ஆட்கள், நிறுவனங்கள் தொடர்பான தரவுத்தள உருவாக்கம்; புகைப்பட, ஒலி, ஒளி ஆவணப்படுத்தல்; பயிற்சிப் பட்டறைகள், நூல் வெளியீடுகள் என பல தளங்களில் நூலக நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

நீங்களும் நூலக வலைத்தளத்தில் உங்களது வெளியீடுகளை ஆவணப்படுத்தலாம்; புதிய ஆவணப்படுத்தற் செயற்பாடுகளைத் தொடங்கலாம்; நூலகச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்களிக்கலாம்; நிதியுதவி வழங்கலாம்; நூலகத்தினைப் பரவலாக்கும் செயற்பாடுகளில் ஈடுபடலாம்; நுட்பப் பங்களிப்பு வழங்கலாம். சிறு துளி பெருவெள்ளம்.

NOOLAHAM
FOUNDATION

தொடர்புகளுக்கு
பத்மநாப ஐயர் (ஐக்கிய இராச்சியம்) :

+44 208 471 5636

சசீவன் (ஐக்கிய இராச்சியம்) :

+44 750 687 4355

சேரன் (இலங்கை) :

+94 772 247 746

மின்னஞ்சல் :

noolahamfoundation@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# R.& V. Food & Wine

எம்மிடம் தரமான இலங்கை மற்றும்
இந்திய உணவுப் பொருட்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.

**2, Cambridge,**
**Parade Enfield, EN1 4JU**

தொடர்புகளுக்கு:- 0208 350 2108



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RiverSure

Insurance

Building Business on reputation is our goal

## Need an Insurance?

Make sure you are covered adequately .

With our experience of over twenty years,
We can provide a broad range of products and services at the most competitive price

# For any insurance need

Get the right advice now, contact
Riversure Ltd at:

London: Tel: 020 8905 8881, 020 8905 8831
Fax : 020 8905 8271

Uthaya, Pitnei, Arun, Shan, Connie, Russell, Shanthi or Priya

ratnam@riversure.com, www.riversure.com

BIBA

Knightsbridge House, Kingsbury Road, London, NW9 8XG

Riversure Limited is authorised and regulated by the Financial Services Authority.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் விழா 2012




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# TOP OF THE CLASS


## TUITION CENTRE

Excellent pass record and excellent feedback from current & previous students

- 11+ Exam Practice
  Verbal Reasoning * Non-verbal reasoning * Maths
- Key stage 1 * Key stage 2 * Key stage 3
- GCSE and AS/A Level
  Maths * Science * English
- 3 Subjects – 3 hours - £20
  2 pupils from the same family - £15

**ENROL NOW**

To see student record and feedback
Please visit our website



www.jegamaths.co.uk

0208 8840732 / 07985337275

38 Winchester Road,
Edmonton N9 9EB

Imperial Offices, 2 Heigham Road,
Eastham, E6 2JG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்!

## நன்கொடைகள், விளம்பரங்கள் தந்து ஆதரவு நல்கிய ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது இதய நன்றிகள்!

1. திரு.ச.மகேஸ்வரன் (நிதி நன்கொடை)
2. திரு.N.திருப்பதி (நிதி நன்கொடை)
3. திரு.கைலாயபதிவாகன் (நிதி நன்கொடை)
4. திரு.K.சபாநாதன் (நிதி நன்கொடை)
5. திரு.S.சிவச்சந்திரன் (நிதி நன்கொடை)
6. திரு.S.சோதீஸ்வரன் (நிதி நன்கொடை)
7. திரு.டெஸ் (நிதி நன்கொடை)
8. திரு.கபிலன் (நிதி நன்கொடை)
9. திரு.என்.பிரபாகர் (அதிட்ட இலாபச்சீட்டுக்கான முதலாம் பரிசு அன்பளிப்பு)
10. திரு.பொ.கேதீஸ்வரன் (அதிட்ட இலாபச்சீட்டிற்கான இரண்டாம் பரிசு அன்பளிப்பு)
11. திரு.இ.இரவீந்திரகுமாரன் (அதிட்ட இலாபச்சீட்டிற்கான மூன்றாம் பரிசு அன்பளிப்பு)
12. திரு.பேரம்பலம் வாதவூரர் (நிதி நன்கொடை)
13. திரு.கிருஸ்ணகுமார் சின்னையா (நிதி நன்கொடை)
14. திரு.க.மதிசூடி (விசேடசித்தியெய்திய மாணவர்களுக்கான விருதுகள் அன்பளிப்பு)
15. என்பீல்ட் இந்து தமிழ் கலாச்சாரச் சங்கம் (நிதி நன்கொடை)
16. டொக்டர் சிவசின்மயானந்தன் (நிதி நன்கொடை)
17. திருமதி.துரைரட்ணம் (நிதி நன்கொடை)
18. டொக்டர் P.கந்தசாமி (நிதி நன்கொடை)
19. திருமதி.மீறா ஆனோல்ட் (AMMC LTD விளம்பரம்)
20. திரு.க.தேவநம்பி (TCHA விளம்பரம்)
21. திரு.பத்மநாப ஐயர் (Noolaham.org விளம்பரம்)
22. திரு.ஜெகதாசன் (Top of the Class விளம்பரம்)
23. சூரியா ஜுவல்ஸ் உரிமையாளர் (விளம்பரம்)
24. திரு.ராசன் (R&V Food and Wine விளம்பரம்)
25. River Sure ஸ்தாபனத்தினர் (விளம்பரம்)
26. KNM Building ஸ்தாபனத்தினர் (விளம்பரம்)
27. Western Jewells ஸ்தாபனத்தினர் (விளம்பரம்)
28. நியூ கண்ணன் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தினர் (விளம்பரம்)
29. CFC Srilankan, South Indian Take away (விளம்பரம்)
30. All is Well Party Service (மேடை அலங்காரம்)
31. Longtek Eletronic Europe Ltd (விளம்பரம்)
32. Chennai Spice ஸ்தாபனத்தினர் (விளம்பரம்)
33. ஓவியர் மூனா அவர்கள் (அட்டைப்பட ஓவியம் அன்பளிப்பு)
34. எமது பாடசாலைப் பெற்றோர்கள் (சிற்றுண்டி உணவு வகைகளுக்கான நிதி அன்பளிப்பு).

தங்கள் அனைவரது ஆதரவிற்கும்
வாழ்த்துக்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

-நிர்வாகக் குழுவினர் (LATA)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Community Housing Association

## தமிழர் சமூக வீட்டுவசதிக் கழகம்

# TAMIL HOUSING – RENT BOND SCHEME




**Are you a Tamil speaker?**
We can help you - give a rent bond to your landlord.

**Do you need help and support finding a home in the private rented sector?**
Tamil Housing has already helped many homeless people through our rent bond scheme. We offer tenants and landlords a range of support services and financial assurance (in the form of a rent bond) to help homeless people.

**Who can benefit from our Rent Bond Scheme?**

- ✓ Anyone who is homeless or threatened with homelessness.
- ✓ Anyone who wanted to live in a private rented accommodation.
- ✓ Anyone who cannot afford a deposit to his/her landlord.
- ✓ Anyone on income support and/or calming benefit.
- ✓ Anyone who is able to live independently.
- ✓ An asylum seeker, who was successful in his/her asylum claim.

**Interested, what to do no next?**
Simply call us on 020 8493 7160, Fax: 020 8493 7161, Email: info@tamilhousing.org.uk
Tamil Community Housing Association Ltd
Tamil House, Unit 2, Fountayne Business Centre,
Broad Lane, Tottenham,
London N15 4AG.

Homeless?
Tamil Housing is here to help you

Funded by
Crisis
in partnership with
CAUSEWAY
IRISH HOUSING ASSOCIATION



**Tamil Housing** – *culturally centred, community driven*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENFIELD NAGAPOOSHANI AMBAL TEMPLE
# என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்



செவ்வாய்க் கிழமைகளில்
காலை 8.00 மணி முதல்
இரவு 9.15 மணி வரை
ஆலயம்
திறந்திருக்கும்

பிரதி செவ்வாய்க்கிழமை
தோறும் ஐந்து தலை
நாகத்தோடு கூடிய சிறிய
நாகம்மைக்கு
அடியவர்கள்
தாங்களாகவே பால்
அபிசேகம் செய்து
அம்பாளுக்கு தேசிக்காய்
விளக்கேற்றி வழிபட்டால்
அம்பாள் சகல
நலன்களும் அருள்வார்

## Temple Opening Hours:

| | Morning | Evening |
|---|---|---|
| Mon: | 8.00am-1.00pm | 5.00pm-9.15pm |
| Tues: | 8.00am-9.15pm | |
| Wed: | 8.00am-1.00pm | 5.00pm-9.15pm |
| Thur: | 8.00am-1.00pm | 5.00pm-9.15pm |
| Fri: | 8.00am-9.15pm | |
| Sat: | 8.00am-9.15pm | |
| Sun: | 8.00am-9.15pm | |

நஞ்சுமிழ் அரவணிந்த நாயகி
நாளும் அன்றன்
கஞ்சமென் மலர்ப்பாதம்
கடையேனென் சிரமேல் வைத்தே
அஞ்சேலென்று ஆதரிப்பாய்
அனைத்துமாய் நின்ற தாயே
மஞ்சுலாம் என்பீல்ட் நகர்வாழ்
நாகம்மை நீயே

61-65 Church Lane, Edmonton, London N9 9PZ

Tel : 020 8884 3333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print, Tel : 0208 503 6643